மாகாணக்கல்வித் திணைக்களம்
வடக்கு மாகாணம்

தரம் -03 நிலையறி பரீட்சை - 2021

பாடம் :- தமிழ் **நேரம் -1.30 மணித்தியாலம்**

மாணவர் பெயர்:- ..... **பாடசாலை:-** .....

1) பொருத்தமானவிடையின் கீழ்க் கோடிடுக.


1) "சின்னச் சின்ன பாவை" என்னும் பாடலைப் பாடியவர் யார்?

1. அழவள்ளியப்பா 2. மு.நல்லதம்பி 3. செல்லக்கணபதி

2) பாகற்காய் கசக்கும் என்பது போல கடுக்காய் - .....

1. துவர்க்கும் 2. உவர்க்கும் 3. புளிக்கும்

3) முற்காலத்தில் எந்தப் பிராணி மூலம் செய்திகள் ஓரிடத்தில் இருந்து இன்னொரு இடத்திற்கு கொண்டு செல்லப்பட்டன?

1.  2.  3. 

4) "அப்பா என்னை அழைத்துச் சென்றார்" என்ற பாடலில்.....எப்பிராணி கோபத்தோடு சீறிப் பார்த்தது.

1.  2.  3. 

5) மணிக்கு இருபது கிலோமீற்றர் வேகத்தில் நீந்துகின்ற பிராணி எது?

1.  2.  3. 

6) நான் பூக்கள் வரைவேன். இவ் வாக்கியம் உணர்த்தும் காலம் எது?

1. இறந்தகாலம் 2. எதிர்காலம் 3. நிகழ்காலம்

7) இல்லை என்ற சொல்லில் ஓர் எழுத்தை நீக்கினால் வரும் சொல்லுக்குரிய படம் எது?

1.  2.  3. 

8) அதிகமாகச் சீனியை உணவில் சேர்த்தால் வரும் நோய் பின்வருவனவற்றுள் எது?

1. நீரிழிவு 2. தலையிடி 3. குடற்புண்

www.ikedu.lk

9) வீட்டில் வளர்ப்பது - மரம். என்பது போல வீரத்தின் மறுபெயர் - ……..

1. அறம் 2. மறம் 3. கோழை

10) "பௌர்ணமி தினங்களில் நூலகம் மூடப்படும்". இது ஒரு ……..

1. அறிவுறுத்தல் 2. கட்டளை 3. அறிவித்தல்

11) "கற்ற …… மறவாதே

கடவுள் …… மறவாதே" இவ் இடைவெளிகளில் வரவேண்டிய சொற்கள் எவை?

1. எண்ணம், குருவை 2. குரு, எண்ணம் 3. குருவை, எண்ணம்

12) நூலகத்திற்குள் கைத்தொலைபேசியை பயன்படுத்தக்கூடாது. இது ஒரு ……

1. அறிவுறுத்தல் 2. அறிவித்தல் 3. கட்டளை

13) "குதிரைஅண்ணா! நீங்கள் மிகவேகமாக ஓடியிருந்தால் வெற்றி பெற்றிருக்கலாம்" என்று கூறிய பிராணி எது?

1.  2.  3. 

14) நம் முன்னோர் இயற்கையுடன் வாழ்ந்தார்கள். இதில் வரும் இயற்கை என்பதன் எதிர்ச் சொல்

1. வனப்பு 2. செயற்கை 3. இளவேனில்

15) பட்டம் கட்டி விளையாடும் காந்தனின் நண்பர்கள் எத்தனை பேர்?

1. நான்கு நண்பர்கள். 2. மூன்று நண்பர்கள். 3. ஐந்து நண்பர்கள்.

16) மரம்+பொந்து = ……என்ற சொல்லை சேர்த்து எழுதினால் வருவது?

1. மரம்பொந்து 2. மரப்பொந்து 3. மரபொந்து

17) அலங்கார மீன்கள் சுறுசுறுப்பாக நீந்தி விளையாடுவதற்குத் தேவையானது எது?

1. ஒட்சிசன் 2. நீர் 3. படகு

18) நெல் - நாற்று போல வாழையின் இளையது?

1. பிள்ளை 2. கன்று 3. குட்டி

19) சிறுவர் நூல்களைப் பார்வையிட இரண்டாம் மாடிக்குச் செல்லுங்கள். இது ஒரு

1. கட்டளை 2. அறிவித்தல் 3. அறிவுறுத்தல்

20) கீழ்வரும் பாடலின் நான்குவரிகள் ஒழுங்கின்றி எழுதப்பட்டுள்ளன அவற்றை சரியாக ஒழுங்குபடுத்தினால் வருவது?

A - அன்பு கொண்ட பாவை C - அன்னை தந்த பாவை

B - சின்னச் சின்ன பாவை D - சீருடைய பாவை

1. B D C A 2. A B C D 3. AC DB

(2x20=40புள்ளிகள்)

www.lkedu.lk

2) வேறுபட்டசொல்லின் கீழ்க் கோடிடுக.

1) அரசன், மன்னன், சந்திரன்

2) நெருப்பு, விளக்கு, தீபம்

3) ஒளி, ஒலி, வெளிச்சம்

4) குளம், கேணி, வாவி

5) இன்பம், மகிழ்ச்சி நட்பு (2x5=10புள்ளிகள்)

3) கீழ்வரும் படங்களுக்குப் பொருத்தமான சொற்களைத் தொடர்புபடுத்துக.

1.  அபாயம்

2.  மீள் சுழற்சிக்கு உட்பட்டது.

3.  மின்தாக்குதலுக்கு இடமுண்டு

4.  இவ்விடத்தில் குப்பைகளைப் போடவும்

5.  கையடக்கத் தொலைபேசி பாவிக்கத்தடை

(2x5=10புள்ளிகள்)

4) கீழ்வருவன சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (✗) எனவும் அடையாளம் இடுக.

1. பறவைகளிலே கிளி பேசும் தன்மை வாய்ந்தது. (.....)
2. நந்தினி தனது உபகரணப் பெட்டியைத் திறக்கவில்லை. (.....)
3. காந்தன் பட்டத்தை எடுத்தான். (.....)
4. அகத்தின் அழகு முகத்தில் தெரியாது. (.....)
5. யானைகள் கூட்டங் கூட்டமாக வாழ்கின்றன. (.....)

(2x5=10புள்ளிகள்)

www.lkedu.lk

5) கீறிட்ட இடத்திற்குப் பொருத்தமான சொல்லைத் தெரிந்து அதன் கீழ்க் கோடிடுக.

1. உயிரினங்கள் உயிர் வாழ்வதற்கு ..... அவசியம்.
   1. வலி 2. வளி 3. வழி
2. யானை மிகவும் ..... வாய்ந்த மிருகம்.
   1. பலம் 2. பழம் 3. பனம்
3. வானம் இருண்டது ..... பொழிந்தது.
   1. மலை 2. மழை 3. மளை
4. பூமி எங்கும் சூரியனின் ..... பரவியது.
   1. ஒளி 2. ஒலி 3. ஒழி
5. அழகுக்கு மேலும் ..... தருவது தொட்டிகளில் வளர்க்கப்படும் வண்ண வண்ண மீன்கள்
   1. அலகு 2. அளகு 3. அழகு (2x5=10புள்ளிகள்)

6) கீழ்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

1. மனிதன் செய்யாத குடை, மழைக்குப் பிடிக்க முடியாத குடை அது என்ன?

   ---

2. பறக்க முடியாத பறவை எது?

   ---

3. பட்டம் கட்டுவதற்குத் தேவையான பொருட்கள் எவை?

   ---

4. நாம் அனைவரும் எதனை விரும்புகின்றோம்?

   ---

5. “சிலுசிலுவென மழை” என்னும் பாடலைப் பாடியவர் யார்?

   ---

6. குதிரைக்கு ஆலோசனை கூறிய பிராணிகள் எவை?

   ---

7. நெருப்பில் பட்டுச் சிவந்தவனுக்கு நீண்ட ஆயுள் அவன் யார்?

(2x7=14புள்ளிகள்)

7) “எனது செல்லப் பிராணி” பற்றி மூன்று வாக்கியங்கள் எழுதுக.

1. .....

   .....

2. .....

   .....

3. .....

   .....

(2x3=06புள்ளிகள்)

www.lkedu.lk